**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண்.708/2023</u>**

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6–ம் நாள் திங்கள்கிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | ராதா | தொழில் |
| த/பெ | துரைசாமி | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1.** என்னுடைய தாத்தா சுப்பராய கவுண்டர் கடந்த **20.10.1913** ம் தேதி வா.சா.ஆ.**1** அடிப்படையில் **11.10** ஏக்கர் நிலத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அவர் இறந்ததற்குப் பிறகு அவரது மகன்களான ரங்கசாமி கவுண்டர் மற்றும் முருகசாமி கவுண்டர் ஆகியோர் மேற்படி சொத்தை அடைந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி ரங்கசாமி கவுண்டர் என்னுடைய தகப்பனார் அவர் **19.02.1985** ஆம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறந்ததற்குப் பிறகு என்னுடைய சகோதரர் நாச்சிமுத்துவும் என்னுடைய சித்தப்பா முருகசாமி கவுண்டரும் **6.09.1985** ஆம் தேதி வா.சா.ஆ.**2** ன் மூலம் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் மேபுறம் பாகம் **5** ஏக்கரா **55** சென்ட் நிலத்தை என்னுடைய சகோதரருக்கும் கிழபுற பாகம் **5** ஏக்கர் **55** சென்ட் நிலத்தை என்னுடைய சித்தப்பாவும் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான்.

**2.** என்னுடைய சகோதரர் நாச்சிமுத்துவுக்கு பிரிக்கப்பட்ட சொத்தை தான் இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். என்னுடைய

சித்தப்பா முருகசாமி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். முருகசாமி கவுண்டர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு இரண்டு மகன்கள் ஒரு மகள் உள்ளது என்றால் சரிதான். அவர்களுக்குள் பாகக்காரர் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். என்னுடைய சித்தப்பாவின் வாரிசுகள் அதில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். என்னுடைய வழக்கில் என்னுடைய சகோதரரும், சித்தப்பாவும், 1985 ஆம் வருடம் செய்து கொண்ட பாகப்பிரிவினை செல்லாது என ஒரு பரிகாரம் கோரியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை தரப்பினரான என்னுடைய சித்தப்பாவின் வாரிசுகளையும் மேற்படி பாகப்பிரிவினை சொத்தையும் இந்த வழக்கில் சேர்க்காததால் நான் கோரிய மேற்கண்ட பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினை குறித்து நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்காத சூழ்நிலையில் அதை தொடர்ந்து நான் கோரிய பரிகாரங்களும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

3. என்னுடைய சகோதரர் செய்து கொண்ட பாகப்பிரிவினை குறித்து நான் அவரிடம் கேட்டதாக என்னுடைய வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவர் இறந்து 12 வருடங்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு காலவரையறை சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய அப்பா இறந்த பிறகு என்னுடைய அப்பாவின் சொத்துக்களில் எனக்கு பாகப்பிரிவினை தேவையில்லை என்று நான் வாய்மொழியாக விடுதலை செய்து கொடுத்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல நான் கையெழுத்தும் போடவில்லை. என்னுடைய சகோதரரும் என்னுடைய சித்தப்பாவும் பாகப்பிரிவினை செய்து கொண்ட போது என்னுடைய கணவர் துரைசாமி என்பவர் தான் உடனிருந்து பாகப்பிரிவினை செய்து வைத்தார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. பாகப்பிரிவினை செய்த விபரம் அன்றைய தேதியிலேயே எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல.

4. என்னுடைய சகோதரர் வனத்துறையில் அதிகாரியாக இருந்தார் என்றால் சரிதான். அவர் அதிக நாட்கள் உடுமலைப்பேட்டையில் தான் வேலை செய்தார் என்று சொன்னால் சரியில்ல வேறு இடங்களிலும் பணி புரிந்தார். உடுமலைப்பேட்டையில் அவர் பணிபுரிந்த போது பெரும்பாலும் என்னுடைய வீட்டில் தான் அவர் இருப்பார் என்று சொன்னால் சரிதான். அவர் இறக்கும் வரையில் எங்களுடன் நெருக்கமாக தான் இருந்தார் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் என்னுடைய சகோதரர் மேலும் ஒரு கிணறை வெட்டி 2005 ஆம் வருடம் ஒரு மின் இணைப்பு பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்படி மின் இணைப்பு என்னுடைய சகோதரன் நாச்சிமுத்து பெயரில்தான் உள்ளது என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி இடத்தில் நான் 440 தென்னை மரங்கள் வைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்படி கிணறு மற்றும் மின் இணைப்பை நான் வழக்கில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. தாவா சொத்திற்கான பட்டா 1985 ஆம் வருடமே என்னுடைய சகோதரர் பெயருக்கு மாற்றப்பட்டுவிட்டது என்று சொன்னால் எனக்கு அப்போது தெரியாது பின்னிட்டு தெரிந்து கொண்டேன். எனக்கு தாக்கல் செய்ததற்கு முன்புதான் அவரது பெயரில் பட்டா இருப்பது தெரியும். என்னுடைய அப்பா இறந்ததற்கு பிறகு பட்டா மாறுதலுக்கு நான் விண்ணப்பம் கொடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி சொத்து முழுக்க முழுக்க என்னுடைய சகோதரரின் சுவாதீனத்தில் தான் இருந்தது என்று சொன்னால் சரியல்ல நானும் அடிக்கடி செல்வேன். அவ்வப்போது சென்று எனக்கு தேவையான காய்கறிகள் தேங்காயை எடுத்து வருவேன். தென்னை மரம் வைத்தபோது நான் பணம் கொடுத்தேன் ஆனால் எவ்வளவு என்று தெரியவில்லை. என்னுடைய அண்ணன் எனக்கு பணமும் கொடுப்பார். வழக்குரையில் அவ்வாறு என்னுடைய அண்ணன் எனக்கு பணம் கொடுப்பார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. என்னுடைய அண்ணன் மேற்படி நிலத்திலிருந்து விளைச்சலில் இருந்து எனக்கு பணம் கொடுத்ததாக தற்போது தான் வழக்குக்காக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சகோதரர் இறந்த பிறகு பிரதிவாதிகளிடம் நான் பணம் எதுவும் வாங்கவில்லை. 12 ஆண்டு காலமாக எனது சகோதரரின் மகனிடம் நான் பாகப்பிரிவினை கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இருப்பதை காட்ட எந்த விதமான ஆவணங்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல பட்டாக்களை தாக்கல் செய்துள்ளேன். அதை தவிற வேறு எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.8 மற்றும் 9 ஆவணங்களில் 22.02.2025 ஆம் தேதி தான் மனு கொடுத்து என்னுடைய பெயரை சேர்த்து உள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

7. தாவாவை தாக்கல் செய்ததற்காக அதை பின்னிட்டு ஏற்படுத்தி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 40 ஆண்டு காலமாக நான் சுவாதீனத்தில் இல்லாததால் அதில் பங்கு வரும் உரிமையை நான் இழந்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் காலம் கடந்து பரிகாரம் கோரியுள்ளதால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்குக்கு முன்பாக இரண்டாம் பிரதிவாதி அவரது பாகத்தை 1–ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்து விட்டார் என்றாலும் மேற்படி சொத்தை 1–ம் பிரதிபாதி 3–ம் பிரதிவாதிக்கு செட்டில்மென்ட் மூலம் எழுதி வைத்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணங்களை நான் ஆட்சேபிக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. எஎன்னுடைய பாக உரிமை, உரிமை நீக்கம் செய்யப்பட்டு விட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.06 20:34:34 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.